**மாதிரி வினாத்தாள் - 2020-2021**

**SAMPLE QUESTION PAPER -2020-2021**

**பத்தாம்வகுப்பு** **மொத்த மதிப்பெண்கள் : 80**

**X -STD** **maximum marks: 80**

**காலஅளவு: 3 மணி**

**Time Allowed: 3 hours**

**தமிழ் - TAMIL**

---

**பகுதி -அ[SECTION A] 40 MARKS**

**1.அ.பின்வரும்பகுதியைப்படித்து,கொடுக்கப்பட்ட பலவுள்தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.** 5x1=5

திருக்குறள்ஒருவாழ்வுநூல்.அதுதமிழகத்தின்செல்வம்அதன்திரண்ட கருத்தெல்லாம்ஒன்றேஒன்றுதான்.அதுமக்களாய்ப்பிறந்தவர்கள் அனைவரும்மக்கள்பண்போடுவாழவேண்டும் என்பதுதான்,அத்தகையபண்புகளில்ஒன்றுசான்றாண்மை.அதனை உடையவரேசான்றோர்.தமிழகம்சான்றோரைத்.தனதுநாட்டுச் செல்வமாக கொண்டிருக்கிறது சேரநாடுவேழமுடைத்து ;சோழநாடுசோறுடைத்துபாண்டியநாடுமுத்துடைத்து ; தொண்டைநாடுசான்றோருடைத்துஎன்பதுஅவ்வையின்வாக்குஇதிலிருந்து மலைவளமாகியயானையும்நிலவளமாகியநெல்லும்,கடல்வளமாகிய முத்தும்மக்கள்வளம்ஆகியசான்றாண்மையும்தமிழகத்தின்செல்வங்கள் என்றுஉணரமுடிகிறது. சான்றாண்மைஎன்பதுதமிழகத்தின்செல்வம். அதுதமிழ்மொழி ஒன்றுக்கேஉரியது. சான்றாண்மை என்ற சொல்லைக்கூட பிறமொழிகளில்மொழிபெயர்க்கமுடியாது. மொழிபெயர்த்துக்கூறினாலும்அச்சொல்லில்தமிழ்கூறும்பொருள்இருக்காது. சான்றோர்என்பதற்குச்சான்றாகவாழ்ந்தவர்என்றுபொருள்கூறினாலும் தவறாகாது. சான்ற என்றசொல் சிறந்த என்ற பொருளிலேயே கையாளப்பட்டிருக்கிறது.

**வினாக்கள்**:

i.திருக்குறளின்திரண்டகருத்துயாது?
அ)மக்கள்அன்போடுவாழவேண்டும் ஆ) மக்கள்பண்போடு வாழவேண்டும் இ) மக்கள்அறிவோடுவாழவேண்டும் ஈ) மக்கள்உணர்வோடுவாழவேண்டும்

ii.தொண்டைநாட்டின்செல்வம்யாது?
அ) யானை ஆ) சோறு இ)சான்றோர் ஈ) முத்து

iii.பாண்டியநாட்டின்செல்வம்யாது ?
அ) வேழம் ஆ) சோறு இ)சான்றோர் ஈ) முத்து

iv.தமிழ்மொழிக்கேஉரியசொல்யாது ?
அ) வேழம் ஆ) சோறு இ)சான்றாண்மை ஈ) சோழநாடு

v.பிறமொழிகளில்மொழிபெயர்க்கமுடியாததமிழ்ச்சொல்எது?
அ) செல்வம் ஆ)வேழம் இ)சான்றாண்மை ஈ) சோறு

(அல்லது)

**ஆ. பின்வரும்பகுதியைப்படித்து,கொடுக்கப்பட்ட பலவுள்தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.**

“பத்துமிளகுஇருந்தால்பகைவன்வீட்டிலும்உண்ணலாம்”என்ற பழமொழி மிளகின் மகத்துவத்தை உணர்த்துகிறது. உலகிலேயே தலைசிறந்த, தரம்வாய்ந்தமிளகுதென்னிந்தியாவில்மட்டுமேகிடைக்கிறது. மிளகில்உள்ளவேதிப்பொருட்கள்அனைத்தும்நம்மைநோயிலிருந்துகாப்பது மட்டுமல்லாமல்உடலில்நோய்எதிர்ப்புச்சக்தியையும்அதிகரிக்கச் செய்கின்றன. நல்லமிளகில்பொட்டாசியம், துத்தநாகம், கால்சியம், மாங்கனீசு, இரும்புச்சத்துமற்றும்மெக்னீசியம், வைட்டமின் ‘சி‘ சத்துகள்அதிகம்உள்ளன.மிளகுவாதத்தைஅடக்கும் பசியைத்தூண்டும் ;வெப்பத்தைக்குறைக்கும்கோழையைஅகற்றும் ;பூச்சிக் கொல்லியாகவும் செயல்படும். நரம்புத்தளர்ச்சி மற்றும் ஞாபகசக்திக் குறைபாடு ஆகியவற்றிற்கும் நல்லமிளகு சிறந்தமருந்தாகும். நல்லமிளகில் உள்ள பிப்பிரின் என்ற அல்கலாய்டு பசியைத்தூண்டுகிறது. வயிற்றில்என்சைம்களைச்சுரக்கச்செய்துஜீரணத்தன்மைஅதிகரிக்கத்துணை புரிகிறது; நச்சுக்கழிவுகள்உடலில்தங்காதுபாதுகாக்கவழிவகுக்கிறது.

**வினாக்கள்**:

i. உலகிலேயேதரம்வாய்ந்தமிளகுஎங்குக்கிடைக்கிறது?
அ) அமெரிக்காவில் ஆ) கிழக்கிந்தியாவில் இ) தென்னிந்தியாவில் ஈ) வடஇந்தியாவில்

ii. மிளகில்உள்ளபசியைத்தூண்டும்அல்கலாய்டின்பெயர்என்ன?
அ) பொட்டாசியம் ஆ) கால்சியம் இ) பிப்பிரின் ஈ) மெக்னீசியம்

iii. மிளகின்மருத்துவப்பயன்என்ன?
அ) வெப்பத்தைஅதிகரிக்கும் ஆ) நரம்புத்தளர்ச்சியைஅதிகரிக்கும்
இ) ஞாபகசக்தியைக்குறைக்கும் ஈ) பசியைத்தூண்டும்.

iv. மிளகில்உள்ளவைட்டமின்சத்துஎது?
அ) வைட்டமின் ‘ஏ’ ஆ) வைட்டமின் ‘சி’ இ) வைட்டமின் ‘டி’
ஈ) வைட்டமின் ‘பி

v.பிப்பிரின்என்பதுஒரு____________
அ)இரும்புச்சத்து ஆ) வேதிப்பொருள் இ) அல்கலாய்டு ஈ)வைட்டமின்

2.பின்வரும்பகுதியைப்படித்துக்கொடுக்கப்பட்ட**பலவுள்தெரிவுசெய்**வினாக் களுக்குஏற்றவிடைஎழுதுக. **5x1=5**

காளைகளை அடக்கும் திருவிழா ஸ்பெயின், போர்ச்சுக்கல் போன்ற அயல்நாடுகளிலும் நடைபெற்று வருகிறது. அது கூர்மையான வாளைக் கொண்டு காளையை காயப்படுத்தி அடக்கும் விளையாட்டுகளாகும். ஆனால் தமிழகத்தில் கொம்புகள் கூர்சீவி விடப்பட்ட முரட்டுக் காளைகளை அடக்கும் சல்லிக்கட்டு தனித்தன்மை வாய்ந்தது மட்டுமல்ல, தமிழரின் வீரத்திற்கும், வீரத்துடன் ஒன்றிணைந்த பண்பாட்டிற்கும் சான்றாகத் திகழ்கிறது.

4ஆயிரம் ஆண்டுகள் பழமையான சிந்து சமவெளி நாகரிக காலத்திலேயே சல்லிக்கட்டு வழக்கத்தில் இருந்துள்ளது. சிந்து சமவெளி

நாகரிக காலத்தில் புழக்கத்தில் இருந்த பொருட்கள், தற்போதைய பாகிஸ்தானில் உள்ள மொகஞ்சதாரோவில் கடந்த 1930-களில் கண்டெடுக்கப்பட்டன. அப்பொருட்கள் டெல்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளன. அந்த பொருட்களில் கல்லால் ஆன ஒரு முத்திரையும் அடங்கும். அந்த முத்திரையில் சல்லிக்கட்டு நிகழ்ச்சியை சித்தரிக்கும் ஒரு சிற்பம் செதுக்கப்பட்டு உள்ளது. ஒரு காளை மாடு தன்னை அடக்க முயலும் வாலிபர்களை முட்டி தூக்கி வீசுவது போலவும், வாலிபர்கள் அந்தரத்தில் பறப்பது போலவும் அந்த முத்திரை செதுக்கப்பட்டு உள்ளது. இந்த முத்திரை 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அதாவது கி.மு. 2000ஆம் ஆண்டைச் சேர்ந்ததாக கருதப்படுகிறது. இதன் மூலம் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சல்லிக்கட்டு வழக்கத்தில் இருந்ததாக தெரியவந்துள்ளது. இதை பல்வேறு ஆராய்ச்சியாளர்களும் உறுதிப்படுத்தி உள்ளனர். ஆனால் இந்த முத்திரையில் எழுத்துகள் எதுவும் இடம்பெறவில்லை.

**வினாக்கள்**:

**i.**சல்லிக்கட்டு ................................ ஆண்டுகளுக்குமுன்பேவழக்கத்தில்இருந்தது.

அ 2000 ஆ .3000 இ .4000 ஈ .5000

ii.மொகஞ்சதாரோ எங்கு அமைந்துள்ளது ?

அ .இந்தியாவில் ஆ .பாகிஸ்தானில் இ .குஜராத்தில் ஈ பஞ்சாப்பில்

iii.காளைகளை அடக்கும் திருவிழா நடக்கும் நாடுகள் எவை?

அ ஸ்பெயின், ஆ .போர்ச்சுக்கல் இ. ஸ்பெயின், ஈ. இந்தியா

iv. சிந்துசமவெளிநாகரிககாலத்தில்புழக்கத்தில்இருந்தபொருட்கள், தற்போதுஎங்குள்ளன?

அ. டெல்லி தேசிய அருங்காட்சியகத்தில் ஆ .சென்னை அருங்காட்சியகத்தில் இ . பாகிஸ்தான் அருங்காட்சியகத்தில் ஈ . பஞ்சாப் அருங்காட்சியகத்தில்

v.மொகஞ்சதாரோவில் பொருட்கள் கண்டெடுக்கப்பட்ட ஆண்டு

அ . 1920-களில் ஆ .1930-களில் இ . 1910-களில் ஈ.1940-களில்

(அல்லது)

<u>ஆ.பின்வரும்பகுதியைப்படித்து,கொடுக்கப்பட்ட**பலவுள்தெரிவுசெய்**வினாக் களுக்கேற்றவிடைஎழுதுக</u> . **5x1=5**

பறம்பு மலையை ஆண்ட பாரி போரில் மரணமடைந்த பிறகு, பாரியின் நண்பரும் அறிவாளருமான கபிலர், பாரியின் இரு மகள்களான அங்கவை சங்கவை ஆகியோரை அழைத்துக் கொண்டு பறம்பு மலையிலிருந்து வெளியேறுகிறார். பாரி மகளிரைத் திருமணம் செய்துகொள்ளும்படி, எருமை நாட்டுத் துவரை நகரில் அரசாண்ட இருங்கோவேள் என்னும் மன்னனைச் சந்திக்கிறார் கபிலர். எருமை நாடு என்பது, இன்றைய மைசூர் ஆகும். எருமை நாடு, என்பது பழந்தமிழ்ப் பெயர். எருமை என்பதை வட மொழியில் மகிஷம் என்றாக்கினர். மகிஷ நாடு, பின்னாளில் மைசூர் ஆனது. துவரை நகரம் எனச் சங்க இலக்கியங்கள் குறிக்கும் நகரம் இன்று மைசூர் அருகே உள்ள துவாரகா நகரமே ஆகும். எருமையூர் மகிசூர் என்றாகி, மைசூர் ஆனதுபோல், துவரை நகரம், துவாரகா ஆகிவிட்டது.

கபிலர் துவரையில் இருந்தவேளிர் பரம்பரையைச் சேர்ந்த இருங்கோவேளைச் சந்தித்து,பாரி மகளிரை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகோள் வைக்கிறார்.

**வினாக்கள்**:

i.துவரை நகரை அரசாண்ட மன்னன் யார்?

அ .பாரி ஆ. கபிலர் இ .இருங்கோவேள் ஈ .வேளிர்

ii. இருங்கோவேள் எப்பரம்பரையைச் சார்ந்தவன்?

அ .சோழர் பரம்பரை ஆ .மைசூர் பரம்பரை

இ .வேளிர் பரம்பரை ஈ.மூவேந்தர்

iii.துவரை நகரம் எனச் சங்க இலக்கியங்கள் குறிக்கும் நகரம்.எது?

அ .மைசூர் ஆ .பறம்பு மலை இ .பிரான் மலை

ஈ .மைசூர் அருகே உள்ள துவாரகா

iv. எருமை நாடு எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பது________.

அ .துவாரகா ஆ .மைசூர் இ .பறம்பு நாடு

ஈ .துவரை

v. எருமை நாடு என்பது__________

அ .பழந்தமிழ்ப் பெயர் ஆ .கன்னடப் பெயர்

இ .வடமொழிப் பெயர் ஈ .எதுவுமில்லை

**3. சான்றுதருக (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)** **( 4 )**

i. இன்னிசைஅளபெடை

அ. உரனசைஇ ஆ. கெடுப்பதூஉம் இ. ஆஅளிய

ஈ. எங்ங்கிறைவன்

ii .உவமைத்தொகை

அ. செம்மலர் ஆ. முல்லைமலர் இ. வட்டநிலா

ஈ.முத்துப்பல்

iii. தனிமொழி

அ.படித்தான் ஆ.சுவைத்தேன் இ. சுவையானதேன்

ஈ. பலகை

iv. வினைமுற்றுத்தொடர்

அ) சென்ற கோதை ஆ) நல்ல மாணவன் இ) படித்தான்பாரி

ஈ) கண்ணாவா !

v. முதனிலைத்தொழிற்பெயர்

அ) எழுதுதல் ஆ) அடி இ) கெடு ஈ) கேடு

**4. கூறியவாறு செய்க(எவையேனும் நான்கனுக்கு மட்டும்)** **(4)**

i. செய்த பணி (வினைத்தொகையாக்குக)

(அ) செய்கின்ற பணி (ஆ) செய்ய பணி (இ) செய் பணி

(ஈ) செய்யும் பணி

ii.கெடு (முதனிலை திரிந்த தொழிற் பெயராக்குக)

(அ) கெடுதல் (ஆ) கேடு (இ)கொடு (ஈ) கேட்டில்

iii .படித்தாயா?(இக்கேள்விக்கு உற்றது உரைத்தல் விடை எழுதுக.)

அ. தலை வலிக்கும் ஆ.எழுதினேன் இ.படிக்கவில்லை

ஈ. தலை வலித்தது

iv.பாடல் ( தொழிற்பெயர்விகுதியைஎழுதுக )

அ. அல் ஆ. தல் இ. ல் ஈ. ஆடு

v. வேந்தர்(உருபும்பயனும்உடன்தொக்கத்தொகையாக்குக )

அ. வாள்வேந்தர் ஆ. பெருவேந்தர் இ. மூவேந்தர்

ஈ. சிற்றரசர்

**5. இலக்கணக் குறிப்பு எழுதுக. (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)**

(4)

i. உறு ன்
அ.இடைச்சொல்தொடர் ஆ. இடைத்தொடர் இ.உரிச்சொல்தொடர்
ஈ. எழுவாய்த்தொடர்

ii. கிளியாரேதூதுசெல்வீர்
அ.பால்வழு ஆ. திணைவழு இ. காலவழு
ஈ.திணைவழுவமைதி

iii.வெட்டு
அ. முதனிலைத்தொழிற்பெயர் ஆ. முதனிலைதிரிந்த தொழிற்பெயர் இ. விகுதிபெற்றதொழிற்பெயர் ஈ. பகுதி

iv.நான்வந்தான்
அ. திணைவழு ஆ. இடவழு இ. பால்வழு ஈ. காலவழு

v. எங்ங்கிறைவன்
அ. ஆய்தம் ஆ.ஒற்றளபெடை இ உயிரளபெடை
ஈ. ஆய்தக்குறுக்கம்

**6.நிரப்புக(அனைத்து வினாக்களுக்கும் விடையளி)** **(4x1=4)**

i.வழாநிலை ___________ வகைப்படும்.
(அ)ஏழு (ஆ) எட்டு (இ) பத்து (ஈ) பதினாறு

ii.அளபெடைஎன்பது ___________.
அ. எழுத்துகள் குறுகி ஒலித்தல் ஆ. எழுத்துகள் நீண்டுஒலித்தல்
இ. எழுத்துகள்இயல்பாய் ஒலித்தல் ஈமாத்திரைகுறைதல்

iii. விடை.........................வகைப்படும்.
அ )ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ ) ஐந்து

iv.பால் என்பதற்கு _____ என்பது பொருள்.
(அ) ஒழுக்கம் (ஆ) பகுப்பு (இ) சத்துப்பொருள் (ஈ ) எண்

7..பின்வரும்செய்யுட்பகுதியைப்படித்துஅதனைத்தொடர்ந்துவரும் பல்விடைவினாக்களுக்குஉரியவிடைகளைஎழுதுக:- **5x1=5**

"சிறுதாம்புதொடுத்தபசலைக்கன்றின்
உறுதுயர்அலமரல்நோக்கிஆய்மகள்
நடுங்குசுவல்அசைத்தகையள்,"கைய
கொடுங்கோல்கோவலர்பின்நின்றுஉய்த்தர
இன்னேவருகுவர்தாயர்" என்போள்
நன்னர்நன்மொழிகேட்டனம்"

வினாக்கள்

i. இச்செய்யுள்இடம்பெற்றுள்ளநூலின்பெயர்என்ன?
அ) முல்லைப்பாட்டு ஆ) பரிபாடல் இ)மலைபடுகடாம்
ஈ) முல்லைப்பாட்டு

ii. இச்செய்யுளின் ஆசிரியர்யார்?
அ) கீரந்தையார் ஆ) நப்பூதனார் இ),பெருங்கௌசிகனார்
ஈ)நக்கீரர்

iii. இப்பாடல் வரிகள் யார் யாரிடம் கூறியது ?
(அ) தலைவி தலைவனிடம் (ஆ) தலைவி தோழியிடம்
(இ) முதுபெண்டிர் தலைவியிடம் (ஈ) தோழி தலைவியிடம்

iv. இச்செய்யுளில்இடம்பெற்றுள்ள சிறுபொழுதும் பெரும்பொழுதும் யாவை?

(அ) முன்பனி, காலை (ஆ) கார்காலம் , மாலை

(இ) கார்காலம் , காலை (ஈ) வேனில். பகல்

v.சுவல்- இதன் பொருள் யாது?

(அ)தோள், (ஆ) காற்று (இ) மண் ( ஈ) சுனை,

**8. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள்தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.** **5x1=5**

திருவள்ளுவர் இல்லறவியலில் விருந்தோம்பலை வலியுறுத்த ஒரு அதிகாரத்தையே அமைத்திருக்கிறார். இல்லறம்புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார் .முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை “மோப்பக் குழையும் அனிச்சம்” என்ற குறளில் எடுத்துரைக்கிறார்.விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.”விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை “ என்று கண்ணகி வருந்துகிறாள் .கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாகக் குறிப்பிடுவதன் மூலம் விருந்தினரைப் போற்றிப் பேணல் தமிழர் தம் மரபு என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகிறார். கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக்கம்பர் குறிப்பிடுகிறார்.கலிங்கத்துப் பரணியிலும் செயங்கொண்டார் விருந்தினருக்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியுள்ளார்.

**வினாக்கள்**

i.இல்லறம்புரிவதுஎதன்பொருட்டேஎன்கிறார்திருவள்ளுவர்?

அ) உறவினரைஉபசரிக்க ஆ)விருந்தினரைஉபசரிக்க

இ) நண்பர்களைஉபசரிக்க ஈ) மகிழ்வோடுவாழ

ii.கண்ணகி தான் எதை எண்ணி வருந்துவதாகக் குறிப்பிடுகிறாள் ?

அ) கணவனின் பிரிவு எண்ணி ஆ) செல்வம் இழந்ததை எண்ணி

இ) விருந்தினரைப் போற்ற முடியாததை எண்ணி

ஈ) எதுவுமில்லை

iii.கம்பன்காட்டும்பெண்கள் எதைச் செய்தனர் ?

அ) விருந்து செய்தனர் ஆ) விருந்தும் ஈகையும் செய்தனர்

இ) ஈகை செய்தனர் ஈ) அறம் செய்தனர்

iv.முகம்வேறுபடாமல்முகமலர்ச்சியோடுவிருந்தினரைவரவேற்கவேண்டும் என்பதற்குவள்ளுவர்காட்டும்குறள்யாது?

அ) மோப்பக் குழையும் அனிச்சம் ஆ) செல்விருந்தோம்பி

இ) விருந்து புறத்ததாத் தான் உண்டல்

ஈ) இருந்தோம்பி இல்வாழ்வது

v.அனிச்சம் என்பது ஒரு__________

அ)வாசனைப்பொருள் ஆ) கொடி இ) மலர் ஈ) மரம்

9.பின்வரும்மனப்பாடக்குறட்பாக்களைச்சரியானசீர்களால்நிரப்புக 4X1=4

i. பண்எண்ணாம் பாடற்கியைபின்றேல்_______

கண்ணோட்டம்இல்லாதகண்.

அ)விண்எண்ணாம் ஆ)கண்எண்ணாம் இ) கருணை ஈ)மனம்

ii. பல்லார்பகைகொளலின்பத்தடுத்ததீமைத்தே
நல்லார்__________ விடல்
அ) நட்பு ஆ) தொடர்கை இ) தொடர்பை ஈ) இணக்கம்

iii. முயற்சிதிருவினைஆக்கும்முயற்றின்மை
____________ புகுத்திவிடும்
அ) வறுமை ஆ) அயர்ச்சி இ) இனிமை ஈ) இன்மை

iv .எப்பொருள்எத்தன்மைத்தாயினும்அப்பொருள்
மெய்ப்பொருள் _________அறிவு
அ) அறிவது ஆ) காண்பது இ)உணர்வது ஈ) தெரிவது

**பகுதி-ஆ**

**SECTION - B MARKS - [40]**

**10. பின்வரும் செய்யுள் வினாக்களுக்குச்சுருக்கமான விடையளி.**

**2x3=6**

i. இடைக்காடனார்இறைவன்திருமுன்விழுந்துவணங்கி உரைத்தனயாவை?

ii. வித்துவக்கோட்டம்மாவிடம்குலசேகரஆழ்வார்உரைப்பனயாவை?

iii. ஒழுக்கத்தின் சிறப்பு குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகள் யாவை ?

**iv.** முல்லைப்பாட்டு கூறும் கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

**11.எவையேனும் மூன்றுஉரைநடைவினாக்களுக்கு விடையளி.**

**3x4=12**

I. தாவரங்களின்பூ,பிஞ்சு குலைவகைகளுக்குவழங்கும்பெயர்களைஎழுதுக.

II. மொழிபெயர்ப்புக்கல்வியின்பயன்கள்குறித்துஎழுதுக.

III. விருந்தோம்பல் - அன்றும்இன்றும்என்பதுகுறித்துவிவரி..

IV. எதிர்காலத்தில்செயற்கைநுண்ணறிவுசெய்யப்போகும்மாற்றங்கள் யாவை?

V. சோலைக்காற்றும்மின்விசிறிக்காற்றும்உரையாடுவதுபோலஓர்உரை யாடல்அமைக்க


12. ஏதேனும்ஒன்று பற்றி ஒரு பக்க அளவில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக: 1x7=7

**I.** புயலிலேஒருதோணி

**II.** கோபல்லபுரத்துமக்களின்விருந்தோம்பல்

**III.** புதியநம்பிக்கை

13.பின்வரும்காட்சியைக்கண்டுகவினுறவரைக (3)



**14. ஏதேனும்ஒருகடிதம்எழுதுக** 1x6=6

I. .உங்கள்பகுதியில் உள்ள பூங்காவில்இலவசஇணையவசதி அமைத்துத் தருமாறுமாவட்டஆட்சியர்க்குக்கடிதம்எழுதுக.

II. உடற்பயிற்சியால்விளையும்நன்மைகள்குறித்துஅயலூர்நண்பனுக்குக் கடிதம்எழுதுக

[இரண்டுகடிதங்களிலும் உன்முகவரி: ஆ.முகிலன் /அ. யாழினி 15. நல்வாழ்வுகுடியிருப்பு, அண்ணாநகர்மேற்கு, சென்னை-600040 எனக்கொள்க]

III. உங்கள்பகுதியில்அரசுப்பள்ளிஅமைக்கவேண்டிஆட்சித்தலைவருக்க மின்னஞ்சல்கடிதம்எழுதுக

( உன்முகவரி :தமிழெழில்@ ஜிமெயில்.காம் )

**15. பின்வருவனவற்றுள்ஏதேனும்ஒருபகுதியின்குறிப்புகளைக் கொண்டு கட்டுரை** 1x6=6

I. முன்னுரை- அரிதரிதுமானிடனாகப்பிறத்தல் - வைகறைத்துயில்எழல் - உணவுஉட்கொள்ளும்தன்மை - உணவுக்கட்டுப்பாடு - சுற்றுப்புறம் - முடிவுரை

II. முன்னுரை-மானுடமேன்மைக்கானவழிகள்- தன்னம்பிக்கைமுதற்படி. ஓய்விலாஉழைப்புஇரண்டாம்படி- விடாமுயற்சியும்ஊக்கமும்அடுத்தபடி- செயலைத்திட்டமிடு; திட்டத்தைசெயல்படுத்து- முடிவுரை

III. முன்னுரை--ஓரறிவுஉயிர்முதல்ஆறறிவுயிர்வரை- உலகில்முதலில்தோன்றியவை-மரம்வளர்ப்போம்- அனைத்துஉயிர்களுக்கும்தாயானவைமரங்கள்-பிறபயன்கள்- மரம்வளர்த்துமனிதம்வளர்ப்போம்